# முல்/ஒலுமடு தமிழ் வித்தியாலயம்

*முதலாம் தவணைப் பரீட்சை*

**தரம்: 7** **தமிழ் மொழியும் இலக்கியமும்** நேரம்: 2 மணி

### *பகுதி - I*

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

1) அந்தரே பிஞ்சில் பழுத்த பழம். இங்கு **பழம்** என்பதன் ஒத்த சொல்?
   1. மொட்டு 2. கனி 3. விதை 4. பால்

2) சாமர்த்தியம் மிக்க மாணவர்கள். இதில் **சாமர்த்தியம்** என்பதன் கருத்து?
   1. கெட்டித்தனம் 2. வேலை 3. பழி 4. உறுதிப்படுத்தல்

3) அந்தரே குறும்புக் கதைகளின் ஆசிரியர் யார்?
   1. ஜின்னா ஷரிபுதீன் 2. ம.மு உவைஸ்3. பி.மொஹிதீன் 4. எம்.நு..்.மான்

4) ஆறு என்ற கவிதையின் ஆசிரியர் யார்?
   1. தேசிகவிநாயகம்பிள்ளை 2. பாரதியார்
   3. பாரதிதாசன் 4. கண்ணதாசன்

5) கல்லும் மலையும் குதித்து வந்தேன். இங்கு **மலை** என்பது
   1. ஆறு 2. திகரி 3. கிரி 4. பள்ளம்

6) ஏறாத மேடுகள் ஏறிவந்தேன். இதில் **மேடு** என்பதன் எதிர்ப்பதம்
   1. திடல் 2. திட்டி 3. பள்ளம் 4. குன்று

7) ஆறு கவிதையின் தொகுப்பு இடம்பெற்ற நூல் எது?
   1. இலக்கிய வழி 2. மலரும் மாலையும்
   3. வ.வே.சு. தொகுதி 4. உமர்கையாம் பாடல்கள்

8) மலரும் மாலையும் என்ற நூலை எழுதியவர் யார்? இதில் இறுதியில் வந்துள்ள நிறுத்தற் குறி
   1. முற்றுப்புள்ளி 2. காற்புள்ளி 3. வினாக்குறி 4. அரைப்புள்ளி

9) அடடா! எத்தனை புதுமை. இங்கு அடடா! என்பதை அடுத்து வந்திருப்பது
   1. மெய்ப்பாட்டுக்குறி 2. வினாக்குறி
   3. முக்காற்புள்ளி 4. காற்புள்ளி

10) இலக்கியப் படகு. இது எவ்வகை அணி
   1. உவமை 2. உருவகம் 3. தற்குறிப்பேற்றம் 4. உயர்வு நவிற்சி

11) அறமே வெல்லும் இங்கு **அறம்** என்பது
   1. மறம் 2. தர்மம் 3. தீமை 4. பண்பு

12) வாக்கியத்தில் செயலைக் காட்டுவது
   1. எழுவாய் 2. பயனிலை 3. செயற்படுபொருள் 4. ஆடைமொழி

13) சுகந்தன் வாடிய கீரையைப் பிடுங்கினான். இதில் வந்துள்ள அடைமொழி

1. சுகந்தன் 2. வாடிய 3. கீரையை 4. பிடுங்கினான்

14) கிளி பழங்களை உண்டது. இதில் எழுவாய்

1. பழங்கள் 2. கிளி 3. உண்டது 4. இல்லை

15) காடும் காடு சார்ந்த இடமும் எவ்வாறு அழைக்கப்படும்.

1. குறிஞ்சி 2. மருதம் 3. முல்லை 4. நெய்தல்

16) பின்வருவனவற்றில் உயிர்க் குற்றெழுத்துக்கள்

1. அமா 2. ஆஊ 3. இஎ 4. ஔகா

17) பாடகன் என்பதன் எதிர்பாற் சொல்

1. பாடகி 2. மனைவி 3விதவை4. பாணி

18) சேவல் என்பதன் பெண்பாற் சொல்

1. நாடு 2. பிடி 3. பேடு 4. பிணை

19) காந்தியடிகளின் சுயசரிதையைக் கூறும் நூல்

1. சத்தியசோதனை 2. கவிதைத்தொகுப்பு
3. மலரும் மாலையும் 4. பாரததேசம்

20) தமிழில் இருக்கும் உயிர் மெய்எழுத்துக்கள்

1. 12 2. 18 3. 216 4. 247

(20 x 1 = 20 புள்ளிகள்)

## பகுதி II

01)

(1) நீர் செய்த கணிப்பீடு ஒன்றின் பெயரைத் தருக?
(2) அதற்கு ஆசிரியர் வழிகாட்டிய வழிகாட்டல்கள் 2 தருக.
(3) நீர் அந்தக் கணிப்பீட்டை எவ்வாறு செய்தீர்?
(4) உமக்கு அந்தக் கணிப்பீடு மூலம் கிடைத்த நன்மைகள் 2 தருக.
(5) நீர் கணிப்பீட்டை மேற்கொள்வதற்குப் பயன்படுத்தியவை எவை?
(6) நீர் கணிப்பீட்டுக்காக உதவிகள் பெற்றது யாரிடம்?

(18 புள்ளிகள்)

**02) பின்வரும் தலைப்புகளில் ஒன்றைத் தெரிவு செய்து 100 சொற்களில் கட்டுரை எழுதுக.**

1. நான் விரும்பும் பெரியார்
2. நான் கண்ட இயற்கை காட்சி
3. எமது பாடசாலை
4. விஞ்ஞானத்தின் வளர்ச்சி

(16 புள்ளிகள்)

**03) உமது பாடசாலையில் நடைபெற்ற கலைவிழா தொடர்பாக உமது நண்பனுக்கு 75 சொற்களில் ஒரு கடிதம் எழுதுக.**

(10 புள்ளிகள்)

04) பின்வரும் வினாக்களுக்கு விடை தருக

1. தேசிகவிநாயகம்பிள்ளையின் கவிதைத் தொகுப்புக்கள் 03 தருக.
2. வனவிலங்குகளை எவ்வாறு பாதுகாக்க வேண்டும்?
3. மரங்களின் பயன்பாடுகள் 05 தருக.
4. கவிஞர் அழக சுந்தரம் எழுதிய நூல்கள் 03 தருக.

(10 புள்ளிகள்)

**05) பின்வரும் சொற்களை வைத்து வாக்கியம் அமைக்குக.**

(1) அரை (2) அறை (3) கவி
(4) களி (5) பனி (6) பணி

(06 புள்ளிகள்)